# தமிழ்நாடு வனத்துறை

அனுப்புநர்

திரு ந.சதீஷ்.இ.வ.ப.
மாவட்ட வன அலுவலர்
திருச்சிராப்பள்ளி கோட்டம்
நீதிமன்ற வளாகம்
திருச்சிராப்பள்ளி.
தொ.பே.எண்.0431-2414265
இமெயில் dfotry@gmail.com

பெறுநர்

செயற்பொறியாளர்,
TWAD BOARD,
RWS கோட்டம், 35, ஜே.கே.நகர்,
காஜாமலை(அஞ்சல்),
திருச்சிராப்பள்ளி-600 023.

நக.எண்.2808/2017-வ நாள். 17.05.2017

அய்யா,

பொருள் : வனம் - தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் - வையம்பட்டி, மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம் - புத்தாநத்தம் to மருங்காபுரி மற்றும் கல்பட்டி ரயில்வே பாதை to பிள்ளையார் நத்தம் சாலை – குடிநீர் குழாய் அமைத்தல்- தொடர்பாக.

பார்வை : தங்களது கடிதஎண்::135/F.CWSS 135 Habs Forest Permission/ JDO/2017 Dated:29.04.17.

*******

தங்களது கடிதத்தில் கேட்டுள்ளவாறு வையம்பட்டி, மருங்காபுரி ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த புத்தாநத்தம் to மருங்காபுரி மற்றும் கல்பட்டி ரயில்வே பாதை to பிள்ளையார் நத்தம் சாலை துவரங்குறிச்சி வனச்சரக கட்டுப்பாட்டில் உள்ள காப்பு வனத்தின் ஊடே செல்கிறது. இதனில் புதிய குடிநீர்குழாய் அமைத்திட மத்திய வனப்பாதுகாப்பு சட்டம் 1980 பிரிவு-2-ன்கீழ் உரியகருத்துரு Online மூலம் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட வேணுமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் குடிநீர்குழாய் அமைத்திடும் பகுதியில் வருவாய்துறை நிலம் ஏதும் இல்லை என்பதற்கான சான்றும், பழங்குடியின மக்கள் வாழ்விடம் மேற்படி இடத்தில் இல்லை என்பதற்கான திருச்சி மாவட்ட ஆட்சியரின் சான்றினையும் பெற்று தங்களது கருத்துருவினை அனுப்பி வைத்திட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். தங்களது கருத்துரு அனைத்து விபரங்களுடன் கிடைக்கப்பெற்றவுடன், இதுகுறித்து அரசுக்கு பரிந்துரை செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள
ஒம்.ந.சதீஷ்
மாவட்ட வன அலுவலர்
திருச்சிராப்பள்ளி.

நகல்:வனச்சரக அலுவலர், துவரங்குறிச்சி மற்றும் மணப்பாறைக்கு உரிய நடவடிக்கை மற்றும் அறிக்கைக்காக அனுப்பப்படுகிறது. மேற்படி இடத்தினை களத்தணிக்கை செய்து விரிவான அறிக்கை மற்றும் காப்புவன வரைபடத்தில் விபரங்களை பதிவு செய்து உடன்சமர்ப்பிக்க வேண்டியது.

//உ.ந.உ.பி//

தே.நி வரைதொழில் அலுவலர்

மே.கு. எண். 25517/135 க.இ.தி./2017/இவை.3/

நாள். 25.5.2017

நகல் உ.தி.பொ., / தி.தி.நி. உபகோட்டம்

மனுதாரர் அவர்களுக்கு தகவலுக்காகவும்

தக்க தொடர் நடவடிக்கைக்காகவும்

அனுப்பப்படுகிறது.

செ.பொ

25.5.2017